Emperor Journal of Classical Tamil Studies
ISSN: 2582-2977
www.ejcts.mayas.info
DOI-http://dx.doi.org/10.35338/EJCTS.2019.1205
© மாயாஸ் பதிப்பகம்

EJCTS
www.ejcts.mayas.info

Volume- I Issue- 1 January - 2022

# அத்தியாயம் - 9

## பெரியபுராணம் ஒரு மீள்வாசிப்பு - அறிஞர் அண்ணாவின் படைப்புகளை முன்வைத்து

*முனைவர் வி.காயத்ரி பிரியதர்ஷினி*
உதவிப் பேராசிரியர்,
ஜி.டி.என்.கலைக்கல்லூரி,
திண்டுக்கல்
மின்னஞ்சல்: priyadarsini1983@gmail.com

## *முன்னுரை*

திராவிட இயக்கம் தமிழ் நிலப் பகுதியில் அரசியல் ,சீர்திருத்தம், இலக்கியம், கலைத்துறை எனப் பலத் தளங்களில் தனக்கெனத் தனி அடையாளத்தை வகுத்துக்கொண்டு செயல்பட்ட ஒரு இயக்கமாகும். இவ்இயக்கத்தினரின் கலைப்படைப்பு இயக்கக் கருத்தியல் பிரச்சார விளக்கமாகவும் பல வேளைகளில் கலகக்குறியீடாகவும் அமைந்திருந்தது. தங்கள் இலக்கியம் மற்றும் அரசியல் செயல்பாட்டில் நேர்மறையான மற்றும் எதிர்மறையான விமர்சனங்கள் பலவற்றையும் இவ்வியக்கம் எதிர்கொண்டது என்றால் மிகையாகாது. அவ்வகையில் இவர்கள் இலக்கியத்திலும் ஒரு புதிய வகை கலை பாணியையும் உருவாக்கினர். அவற்றில் அடிப்படையாகக் கருதப்படுவது தொன்மை புராண இதிகாசங்களை மீள் வாசிப்பிற்கு உட்படுத்துவது. இம் மீள் வாசிப்பிற்கு உட்படுத்தப்பட்ட புராணங்கள் பலவற்றில் பெரியபுராணமும் ஒன்று. அப்புராணத்தைத் திராவிட இயக்க படைப்பாளர்களில் முக்கியத்துவம் பெறுபவரும் திராவிட முன்னேற்றக் கழகத்தை உருவாக்கியவருமான அறிஞர் அண்ணாவின் கட்டுரைகளில் எவ்வாறு

மீள்வாசிப்பு செய்யப்படுகின்றது என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## திராவிட இயக்கத்தினரின் இலக்கியப் பார்வை

> “திராவிட படைப்பாளர்கள் மக்களின் அன்றாட வாழ்வில் பிணைப்புக் கொண்டிருந்த சமயத்தையும், அச்சமயத்தின் துணைகொண்டு நிறுவப்பட்ட சமுதாய அமைப்பையும் மாற்ற முயன்றனர். அன்றாட வாழ்க்கை மாற்றத்தையே தமது முக்கிய நோக்கமாகக் கொண்டு கடமையாற்றிய இவர்கள் பண்பாட்டுத் துறையிலே தமது கவனத்தைச் செலுத்தினர். தம் இலக்கியக் கொள்கைகளைத் திட்டவட்டமாக கூற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டபோது, ஒழுங்கீனங்கள் அற்ற தமிழர் பண்பாட்டு வாழ்வை இலட்சியமாகக் காட்டினர்” (மங்கையர்க்கரசி, 2003,ப.51).

திராவிட இயக்கம் தன்னை வலுவான இயக்கமாகக் கட்டமைக்க முனைந்த பல காரணிகளில் ஒன்று தான் இலக்கியம் இலக்கியத்தை மிகச்சரியான பிரச்சார சாதனமாகவும் கருத்தியல் பரப்பியலுக்குமான கருவியாகவும் பயன்படுத்திக்கொண்டனர். இக்கருத்தை வெளி ரங்கராஜன் அவர்களின் கருத்துக்கொண்டு மேலும் வலுசேர்க்க இயலும்.

> “ தமிழகக் கலை இலக்கிய வரலாற்றில் ஒரு சாதாரண மனிதனின் கலாச்சார இருப்பையும் ஈடுபாட்டையும் உணரத் தலைப்பட்டது திராவிட இயக்கங்களின் காலத்தில்தான்” (**வெளி ரங்கராஜன்**,2008).

பார்ப்பனியத்துக்கு மாற்றாக சங்ககாலத் தமிழர்களின் காதல், வீரம் கலந்த பண்பாட்டை எழுதியது, அதன் வாயிலாக சங்கத் தமிழைப் புதிய வடிவில் காண வைத்தது இவர்களின் தலைசிறந்த பணி எனலாம். மேலும் தமிழ் உரைநடையில் செறிவு, கூர்மையான சமூக விமர்சனங்கள் ஆகியவற்றை வெகுமக்கள் பரவலுக்கு கொண்டு சென்ற பெருமை திராவிட இயக்கத்தினரைச் சாரும். இவர்களின் இலக்கிய அணுகுமுறையைக் கீழ்வரும் சில காரணிகள் கொண்டுவகைப்படுத்தஇயலும்.

1. சமூகவிமர்சனத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தனர்.
2. புராண மதிப்பீடுகள் மீது வலுவான விமர்சனத்தை முன்வைத்தனர்.
3. சமூக ஏற்றத்தாழ்வுகளைக் கேள்விக்கு உள்ளாகினர்
4. பகுத்தறிவுவாதங்கள் முன்வைக்கப்பட்டன.
5. தொன்மை என்று கருதப்பட்ட அனைத்து அம்சங்களையும் சுய

## சிந்தனையோடு அணுகினர்

இவர்களின் படைப்பாக்க நெறி பற்றி மார்க்ஸ் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

> "அ. ஆரிய மயமாதல், மூடநம்பிக்கை, டில்லி ஆதிக்கம் ஆகியவற்றிற்கு எதிரான வெளிப்படையான சமூக, அரசியல் விமர்சனங்கள், பகுத்தறிவு, தமிழர் வீரம், கற்பு ஆகிய சொல்லாடல்களின் மூலமாகத் தமிழக வரலாற்றை மீண்டும் எழுதுதல், தமிழ்த் தேசியத்தைக் கட்டமைத்தல்.
> ஆ. ஏராளமான நீண்ட பாட்டுகளையும் பார்ப்பனிய மயப்பட்ட சம்பாஷணைகளையும் நீண்ட தனித்தமிழ் வசனங்கள் அடுக்குமொழி உரையாடல்கள் ஆகியவற்றால் மாற்றீடு செய்தல்.
> இ. காங்கிரஸ் ஆட்சியை மாற்றீடு செய்து அதனிடத்தில் தமிழ், திராவிடத் தேசிய உணர்வுடைய ஆட்சி ஒன்றை அமைக்கும் நோக்கில் வரலாற்றுருவாக்கத்தின் ஓரங்கமாகச் செயல்படல்"; (மார்க்ஸ். 2001, ப.131).

அதிகாரவர்க்கம் வரையறுத்த, வலியுறுத்திய இலக்கியங்களே மக்கள் கைகளில் கொடுக்கப்பட்டன. அவற்றையே மக்களும் தமிழர்களுக்கான பண்பாட்டுக் கொள்கைகள் என ஏற்றுக்கொண்டனர்.இதையே அடிப்படை வாதமாக திராவிட இயக்கத்தினர் முன்வைத்தனர். அடித்தள மக்களை முன்னிறுத்திய மற்றும் சமயம், மூடநம்பிக்கைகள் போன்றவற்றிற்கு எதிரான பார்வையை முன்வைத்தனர் அதன் வெளிப்பாடுதான் புராண, இதிகாசங்கள் மீள்வாசிப்பு.

## பெரியபுராணம் ஒரு பார்வை

பன்னிரு திருமுறைகளில் பன்னிரெண்டாம் திருமுறையாக போற்றப்படும் இத்திருமுறை மற்ற திருமுறைகளிலினின்று மாறுபட்டு சைவ அடியவர்களின் வரலாற்றைக் கூறும் சரித்திர நூலாகப் போற்றப்படுகின்றது. தொகை,வகை, விரி என்ற நூல்களின் வரிசையில் விரி நூல் வகையைச் சார்ந்தது. சுந்தரா், நம்பியாண்டார் நம்பி போன்றோரின் நூல்களை அடியொற்றி அதன் விரிவான களஆய்வு நூலாகப் போற்றப்படுகின்றது.

> "தொண்டு செய்ய வேண்டும் என்ற நோக்கமுடையோர் அதற்கான வழியைத் தேட வேண்டியதில்லை. தாங்கள் செய்யும் தொழிலையே தொண்டு நெறியாக மாற்றி அமைத்துக் கொள்ள முடியும் என்கிறது பெரியபுராணம்" (சாமி தியாகராசன்,2014,ப.191)

இறைவனைச் அடைய உண்மையான பக்திநெறி ஒன்றே போதுமானது. என்று வலியுறுத்திய புராண நூல் இது. சமண, பௌத்த சமயங்கள் வலியுறுத்திய பல வழிபாட்டு முறைகள், இறை அணுகல் நெறியினின்று மாறுபட்டு அடித்தள

மக்களும் இறையன்பையும் இறையனுபவத்தையும் பெறலாம் என்று வலியுறுத்திய புராணநூல் என்பது குறிப்பிடத்தக்கது. சமண இலக்கியங்களுக்கான மாற்றீடாக இப்புராண நூல் கருதப்படுகின்றது.

## அறிஞர் அண்ணாவின் பார்வையில் பெரியபுராணம்

திராவிட இயக்கப் படைப்பாளிகள் பலருக்கும் முன்னோடியாகவும் வழிகாட்டியாகவும் திகழ்ந்தவர் அண்ணா. தமிழ்த்தேசியம் என்ற சிந்தனையை பெரிய அளவில் வளர்த்தெடுத்தவர்களில் அண்ணாவிற்குப் பெரும்பங்கு உண்டு. மக்களின் உணர்வை தம் இயக்கத்திற்குச் சார்பான உணர்வாக மாற்ற அண்ணா மேற்கொண்ட வழிகளில் முக்கியமானவை மேடைப்பேச்சு, கட்டுரைகள், கதைகள், நாடகங்கள், திரைப்படங்கள் எனக் கலையின் பல தளங்கள் வாயிலாக மக்களை நெருங்கினார். அவற்றில் அண்ணாவின் புனைகதைகள் ஏற்படுத்திய தாக்கத்திற்கு இணையான தாக்கத்தை கட்டுரைகளும் ஏற்படுத்தின. அக்கட்டுரைகளில் பெரியபுராணம் குறித்த சிந்தனை எவ்வாறு முன்வைக்கப்படுகின்றது என்பது நோக்கத்தக்கது.

## தமிழர்களுக்கு எதிரான புராணம்

புராண இதிகாச மனுதரும ஒழிப்பு' என்னும் கட்டுரையில் புராண இதிகாசங்கள் மக்களைச் சிந்திக்க விடாமல் செய்கிறது என்ற விமர்சனத்தை முன்வைக்கிறார். இதில் பெரியபுராணம் குறித்த இவரின் பார்வை கவனிக்கத்தக்கது. கம்பராமாயணம் தமிழ் மக்களை எவ்வாறு அரக்கர்களாக சித்திரித்ததோ அதே போன்றே பெரிய புராணமும் தமிழர்களை சற்சூத்திரர்களாக, கொலைக்கஞ்சாக் கொடியவர்களாகச் சித்திரித்துள்ளது என்பதோடு இயற்கைக்குப் பொருந்தாக் கதைகளை நுழைத்திருப்பதோடு தமிழர்களின் மரபு மற்றும் மொழி பண்பாட்டிற்கு எதிரானக் கருத்துக்களை இப்புராணம் வலியுறுத்துவதாலேயே திராவிட இயக்கம் அதை எதிர்க்கிறது என்கிறார்.

## சேக்கிழார் மீது வைக்கப்படும் விமர்சனம்

மதம் மக்களின் நன்மைக்காக உருவாக்கப்பட்டது. என்ற கருத்தை மறுக்கும் அண்ணா, மக்களின் வறுமையைப் போக்காத வளர்ச்சிக்கு வித்திடாத சமயம் குறித்த விமர்சனத்தை, ‘சேக்கிழார் சீர்திருத்தக்காரரா?’ என்ற கட்டுரையில் விவாதிக்கின்றார். சேக்கிழார் சீர்திருத்தக்காரர் அன்று, அவர் முன்னிறுத்தும் அடியவர்கள் வரலாறு அனைத்தும் நடப்பியலுக்கு ஒவ்வாதவை. பிற்போக்குச் சிந்தனை கொண்டவையாகவே காண்கிறார்.

> “மனைவியை விலைக்கு விற்பது; மனைவியைக் கொல்வது; பிள்ளையைக் கொன்று கறி சமைப்பது; கண்ணைப் பிடுங்கிக் கொள்வது;

தற்கொலை செய்து கொள்வது; ஊரார் உடைமையைத் திருடுவது; சூதாடுவது; பொய் பேசுவது; ஏமாற்றுவது; நயவஞ்சகம் பேசுவது; நல்லவர்களை வைவது ஆகிய காரியங்கள் எல்லாம் மக்களாய்ப் பிறந்தோர் செய்யவேண்டியவையே என்பதை சேக்கிழார் நன்கு வலியுறுத்துகிறார்".(அண்ணா,1998,ப.175)

சேக்கிழார் தம் புராணத்தில் கூறியுள்ள பக்தி நெறிகளை எடுத்துக்காட்டி இது பக்திநெறியன்று. மேலும் மதத்திலும் சமூகத்திலும் எவ்வித சீர்திருத்தத்தையும் முன்வைக்காத சேக்கிழார் ஆரிய இனத்திற்கு ஆக்கம் தேடுகின்றார். இவரை சீர்திருத்தக்காரராக போற்றுவது தவறென்கிறார்.

'அற்புதம் பாரீர்' என்ற கட்டுரையில் சைவ அடியவர்களால் நிகழ்த்தப்பட்ட அற்புதங்களாக பெரியபுராணம் கூறுவனவற்றை எடுத்துக்காட்டி

" இறந்தவன் பிழைத்தது - எலும்பு பெண்ணானது- அறுந்த மூக்கும் தேய்ந்த கையும் வளர்ந்தது- கறியாகச் சமைக்கப்பட்ட பிள்ளை காளையாக வளர்ந்தது- நீரால் விளக்கெரித்தது - நஞ்சு அமுதமானது - கல்லைக் கலமாகக் கடலில் ஓட்டியது -------------- பறையன் பார்ப்பனனானது" (அண்ணா,1998,ப.232)

என பெரியபுராணம் பகுத்தறிவிற்கு மாற்றான ஒரு சிந்தனையை முன்வைத்து சைவத்திற்கு உயர்வு கற்பிக்க இயற்கைக்கு மாறான நிகழ்ச்சிகளை புனைந்திருப்பது மூடநம்பிக்கையை வளர்க்கும் முயற்சியாகவே இதைக்காண்கிறார்.

## நாயன்மார்களின் சமண எதிர்ப்பு

திரு.வி.க அவர்களின் சைவ சமயப்பற்றைச் சாடும் விதத்தில் எழுதப்பட்டக் கட்டுரைதான் கலியாணசுந்தரரே! கழுவேற்றினரே! கழுவாய்த் தேடுகிறீரா? இக்கட்டுரையில் நாயன்மார்களின் சமண எதிர்ப்பும் குறிப்பாக திருஞானசம்பந்தர் வலியுறுத்தலின்படி சமணர்கள் கழுவேற்றப்பட்டதைப் புராணச் சான்றுடன் காட்டி, அன்பையும் அறத்தையும் போதித்துவிட்டு கொலைச்செயலில் ஈடுபடுவது இறைப்பற்றாளர்க்கு மாறான செயல் மேலும் பெரியபுராணத்தில் இடம்பெறும் சமணச்சாடலை

"மறை வழக்கமில்லாத மாபாவிகள்"
"பாழியுறை வேழநிகர் பாழ் அமணர்"
"பொய்யராம் அமணர்"
"அறிவிலாத அமணர்" (அண்ணா,1998,212)

போன்றவற்றை எடுத்துக்காட்டி இவற்றை மதத்துவேஷம் என்கிறார். சைவசமயத்தில் பக்தி நெறி என்ற பெயரில் சமண சமய எதிர்ப்பு மேலோங்கியிருந்ததும் அப்பக்திநெறியினை உயர்ந்தது எனப் போற்றுவதையும் விமர்சிக்கின்றார்.

'தீயிட்ட திருவிளையாடல்' என்ற கட்டுரையில் சமணர்கள் பாண்டிய மன்னனின் துணையோடு திருஞானசம்பந்தரைத் தீயிட்டுக் கொல்ல முயன்றதும், ஞானசம்பந்தர் தம் சிவநெறியால் அத்தீயை அடக்கினார், மேலும் தம் ஏவலின்படி அத்தீயை மன்னருக்கு எதிராக வெப்புநோயாக மாற்றினார் என்ற வரலாற்றின் வழி சமணர்கள் இட்ட தீ சுடாது, சைவர்கள் தீச்சுடும் என்பதும்

" பையவே சென்று பாண்டியர்க்காகவே" இத்திருஞானசம்பந்தரின் செயலை தமிழர்களுக்கு எதிரான பார்ப்பனியச் செயலாகச் சாடுகின்றார்.

'மன்னிக்க முடியாத குற்றம்' என்ற கட்டுரையில் சமணர்கள் குறித்த சேக்கிழாரின் பார்வையை எடுத்துக்காட்டி

"------------- மிதித்தேறி
ஈயும் தலைமேல் இருத்தலால் அஃதறிவோர்
காயும் கதமின்மை நன்று" (அண்ணா,1998,219)

அமைதியும் சிந்தித்துச் செயல்படும் ஆற்றல் கொண்ட சமணர்களை வடவைப் போல் சீறி, வாயில் வந்ததைப் பிதற்றினார்கள், குரைத்தார்கள், வெகுண்டார்கள் என்று சாடுவது பொருந்தாது. மேலும் அநபாயச் சோழனை சைவ மதத்திற்கு மாற்றுவதற்கு இவர் மேற்கொண்ட இம்முறை இலக்கியவாதிக்கு பொருந்தாது என்ற வாதத்தை முன்வைக்கின்றார்.

## பார்ப்பனீயப் புராணம்

பெரிய புராணம் பார்ப்பனீயத்தை வலியுறுத்தும் இலக்கியமாகத்திகழ்வதைப் 'புராணமா சரித்திரமா' என்ற கட்டுரையில் திருநீலகண்ட நாயனார் மற்றும் சுந்தரமூர்த்தி நாயனார் வரலாற்றின் வாயிலாக எடுத்துக்காட்டுகின்றார். திருநீலகண்டர் செய்த தவற்றிற்கு தீர்ப்பு தருபவர்கள் தில்லைவாழ் அந்தணர்கள் மற்றும் சுந்தரரின் வழக்கிற்கு தீர்ப்பு கூறுபவர்கள் திருவெண்ணெய் நல்லூர் அந்தணர்கள் இங்கே அந்தணர்களே தீர்ப்பு வழங்குவதற்கு உரியவர்கள் என்று இவ்விலக்கியம் வலியுறுத்துவது பார்ப்பனீய மேலாண்மையை எடுத்துக்காட்டுகின்றது.திருநீலகண்டர் திருவேட்டைத் திருடினார் என்று சிவத்துறவி தொடர்ந்த வழக்கினை எடுத்துக்காட்டி

"வழக்கைத் தொடர்ந்தவர் ஒரு பார்ப்பனத்துறவி; தொடரப்பட்டவர் குயவர் குலத்தவர்; தீர்ப்புக்கூறியவர்கள் தில்லைப் பார்ப்பனர்.--------- தீர்ப்பு வழங்கப்பட்டதும் ஒரு தலைப்பட்சமானது. பார்ப்பனத்துறவிச் சொற்படி நீதிவழங்கியுள்ளனர்".

" சுந்தரரை அடிமைகொள்ளவந்த பார்ப்பனச் சிவனுடைய முறையீட்டைக் கேட்டதும், அங்கு கூடியிருந்த பார்ப்பனர்கள் எல்லாரும் வெகுண்டெழுந்து, பார்ப்பனர்க்குப் பார்ப்பனர் அடிமையாதல் யாங்ஙனம்? இது அடாது? என்று கூச்சலிட்டதாகப் பெரியபுராணமே கூறுகின்றது". (அண்ணா,1998,245)

இவ்விரு கருத்துக்கள் வாயிலாக பார்ப்பனர்களுக்கு உயர்வு கொடுக்கும் பார்ப்பனர்களுக்கு ஆக்கந்தரும் சமயக் கொள்கைகளையே பெரியபுராணம் வலியுறுத்துகின்றது. பார்ப்பனர்களுக்கு பிற குலத்தவர்களே அடிமையாக இருக்கவேண்டுமென்பது மறைமுகமாக வலியுறுத்தும் புராணநூல் இது. பார்ப்பனர்களை அதிகார வர்க்கமாகச் சித்திரிக்கின்றது. உலகியலுக்கு ஒவ்வாத, அறிவைப் பாழ்படுத்தும் இப்புராணத்தைத் தமிழர்கள் தவிர்க்க வேண்டுமென்கிறார்.

## அடியவர்களை இறைவன் ஆட்கொண்ட விதம்

'புராணக்கால பஞ்சத்தின் புதுமை' என்ற கட்டுரையில் திருவீழிமிழலையில் ஏற்பட்ட பஞ்சத்தில் திருஞானசம்பந்தர் மற்றும் திருநாவுக்கரசருக்கு இறைவன் செய்த அருள்நெறியினை எடுத்துக்காட்டுகின்றார்.

"உலகியல் நிகழ்ச்சியினில் அணைந்த தீய உறுபசிநோய் உமைஅடையாதெனினும் உம்பால், நிலவுசிவநெறிசார்ந்தோர் தம்மை வாட்டம் நீக்குதற்கு நித்தமோர் காசுயாமளித்தோம்"(அண்ணா,1998,312).

சேக்கிழாரின் கருத்தை எடுத்துக்காட்டி சிவனடியார்களுக்கு மட்டும் பசி தீர்க்கும் இறைவனின் அருட்தன்மையை எவ்வாறு விவரிப்பது என்கிறார்.

"மன்னுயிர்கள் கண்சாம்பி உணவுமாறி" (அண்ணா,1998,312).

என்பதிலிருந்து உயிர்கள் அனைத்தும் பசியால் கண்பஞ்சடைந்திருந்த காலத்தும் இரக்கமில்லா இறைவன் சிவன். அடியவர்களுக்கு மட்டும் அருட்தன்மை அளிப்பதாகப் படைத்திருப்பது புதுமை என்கிறார்.

## பகுத்தறிவிற்கு மாறான சிந்தனைகள்

'சிலந்தியும் சிவனும்' என்ற கட்டுரையில் சிலந்திக்கும் யானைக்கும் தம் பிறப்பறுத்து அருள் நீக்கிய பெருமையையும் சிலந்தி சோழன் செங்கணான் மன்னனான பிறந்த வரலாற்றையும் எடுத்துக்காட்டி அஃறிணை உயிர்கள் பக்தி நெறி கொண்டிருந்தன என்பதிலிருந்த அறிவுக்கும் உண்மைக்கும் புறம்பான கருத்தை முன்வைத்துள்ளார் சேக்கிழார் என்கிறார்.

> "யானையும் சிலந்திப்பூச்சியும் சிவனை வழிபட்டு அருள்பெற்றன என்று பெரியபுராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறதே அது உண்மையா? மக்களாய்ப் பிறந்தால் கூட மகேசுவரனுடைய அருளைப் பெறுவது எளிதில் முடியக்கூடிய காரியமல்ல என்று புராணங்களிலே சொல்லப்பட்டிருக்கிறதே! அப்படியிருக்க யானையும் சிலந்தியும் சிவனருளைப் பெற்றதாகச் சொல்லப்படுவதை எப்படி நம்புவதென்று சைவப்புலவர்களைக் கேட்கின்றோம்" (அண்ணா,1998,332).

பகுத்தறிவிற்கு மாறான கருத்துக்களை மதம், புராணம், இதிகாசங்கள் என்ற பெயரில் மக்களிடம் நிலைபெற்றிருப்பதை எதிர்ப்பதோடு, எதையும் ஆராய்ச்சி கண்கொண்டு அணுகவேண்டுமென்கிறார். தமிழர்களை இழிவுபடுத்தி மனுதர்மத்தையும், பார்ப்பனியத்தையும் புராணங்களை தமிழர்கள் ஏற்றல்கூடாதென்கிறார்.

## தொகுப்புரை

பெரியபுராணத்தை மீள்வாசிப்பு செய்யும் அறிஞர் அண்ணா உன்னதங்கள் என்று கட்டமைக்கப்பட்டவற்றை மறுதலித்ததோடு, புனிதம். தெய்வீகம் என்பதை மறுவாசிப்பிற்கும் உட்படுத்துகின்றார். தங்கள் இயக்கத்தின் அடிப்படைக் கருத்தியலான கடவுள் மறுப்பு என்பதை வலியுறுத்த கடவுள் தொடர்பாக வழக்கில் உள்ள பழங்கதைகளைக் கேள்விக்குள்ளாக்குகிறார். பகுத்தறிவு வாதத்தோடு எதையும் அணுகுதல் என்ற கொள்கை முன்னெடுப்பில் பெரியபுராணத்தை அணுகி அதற்கான விவாதங்களையும் காரணகாரியத்தோடு அணுகியுள்ளார். அதிகார வர்க்கம் வலியுறுத்தியவற்றை அப்படியே ஏற்றுக்கொள்ளுதல் என்பது அறிவிற்கு பொருந்தாது என்பதைத் தன் கட்டுரைகள் வாயிலாக முன்வைக்கின்றார்.

## துணைநூற்பட்டியல்

1. அண்ணா.(1998)., அறிஞர் அண்ணா கட்டுரைகள். சென்னை: திராவிடர் கழக வெளியீடு
2. பாலசுப்ரமணியம்,சிற்பி. பத்மநாபன்,நீல.(பதி.) (2014)., புதிய தமிழ் இலக்கிய வரலாறு, III , புது தில்லி: சாகித்திய அகாதெமி வெளியீடு.
3. மங்கையர்க்கரசி,சிவ.(2003)., 'திராவிட இயக்கமும் தமிழ் இலக்கியமும், தமிழியல் ஆய்வு. சோம.இராஜேந்திரன் (பதி.). திருச்சி: கணியன் பூங்குன்றனார் ஆய்வு மன்றம்.
4. மார்க்ஸ்,அ.(2001)., கலாச்சாரத்தின் வன்முறை. புதுநத்தம்: அடையாளம் பதிப்பகம்.
5. வெளி ரங்கராஜன், திராவிட இயக்க நாடகங்கள்,(2008)., “https://tamil.webtunia.com/stories-in-tamil